# மில்க்வைற் செய்தி

# Milk White News

தாபாற்பெட்டி இல 77, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ கார்த்திகை 1987 ★ இதழ் 143


## மங்களகரமான கார்த்திகை

எங்களைப் பொறுத்தமட்டில் 1987ஆம் ஆண்டின் கார்த்திகை மாதம் பெரும் கொண்டாட்டத்துக்குரிய மாதமாகும். இந்த ஆண்டையே விழாமயமாகக் கொண்டாட வேண்டும் என நாம் கருதி ஆண்டின் முதல் மாதத்திலேயே எங்கள் மில்க்வைற் செய்தியின் பக்கங்களைப் பதினுருக அதிகரித்துப் பல்வேறு செய்திகளை நிரைப்படுத்தித் தர ஆரம்பித்தோம். ஐப்பசி மாத இதழை அமரர் பரநிருபசிங்கம் அவர்களின் பெருமை கூறுவதில் நிரப்பிவிட்டோம்.



மில்க்வைற் தொழிலதிபருக்கு கராட்டிக் கலை பயிற்றும் டாக்டர் சிவலோகநாதன் தலைமையில், தொழிலதிபர் வசாவிளான் வைத்தியசாலையில் பருவகால மரம் நாட்டினர்.

அடுத்து கார்த்திகை மாத இதழைக் கனத்ததாக வெளியிடுவதற்கு விரும்பினேம். மனிதன் பிரேரித்தல் வழக்கம் ஆனல் செயல்முறை இறைவனைப் பொறுத்ததுதானே!

வசிட்ட முனிவர் திரிகாலங்களையும் உணர்ந்த பிரம்மரிஷி. சுமந்திரன் அநுபவம் மிகுந்த முதன்மந்திரி. தசரத சக்கரவர்த்தி மிகப்பெரிய ஞானி. இவர்கள் எல்லோரும் இராமருக்கு முடிசூட்டத் தீர்மானித்தனர், பிரேரித்தனர்.

ஆனல் பதினன்கு ஆண்டுக் காலம் தாழ்த்தியே அந்த முடிசூட்டுவிழா நடைபெற்றது. இது எதுவும் நம் கருத்தின் வண்ணம் நடைபெறுது என்பதைக் குறிக்கிறது. ஆகவே எங்கள் கார்த்திகை இதழ் காலதாமதமாக வெளிவருவதை மன்னிப்பீர்களாக.

★ அறுபது ஆண்டு அனுபவம் கண்ட தொழிலகம் ★

சிவமயம்



# கடவுள் வணக்கம்

## சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம்

திருமழபாடி

பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றையணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே.

திருச்சிற்றம்பலம்

பொன்போலும் திருமேனியை உடையவரே, அரையில் புலியின் தோலை உடுத்து, மின்னல் போன்ற சடையில் ஒளி பொருந்திய கொன்றை மாலையைச்சூடியவரே, எமது தலைவரே, விலை மதிக்கமுடியாத இரத்தினம் போன்றவரே, திருமழபாடி என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள மாணிக்கம் போன்றவரே, அடியேனுக்குத் தாய் போன்றவரே. இப்பொழுது தேவரீரைத் தவிர அடியேன் வேறு யாரை நினைப்பேன்?

## அந்தாதிப்பிரபந்தங்கள்

1. திருப்போரூர்மகவந்தாதி
   சபாபதி முதலியார்
2. திருப்போரூர் பதிற்றுப்பத்தந்தாதி
   சபாபதி முதலியார்
3. திருப்போரூர் திரிபந்தாதி
   சபாபதி முதலியார்
4. புரசை பதிற்றுப்பத்தந்தாதி
   சபாபதி முதலியார்
5. வடிவுடையம்மையந்தாதி
   சபாபதி முதலியார்
6. ஆவினன் குடியந்தாதி
   தொட்டிக்கலை சுப்பிரமணியமுனிவர்
7. நல்லையந்தாதி
   நல்லை சேனாதிராய முதலியார்
8. சித்திரயம் கவந்தாதி
   தொழுவூர் வேலாயுத முதலியார்
9. திருத்தணிகையந்தாதி
   தொழுவூர் வேலாயுத முதலியார்
10. திருத்தணிகை வெண்பாவந்தாதி
    தொழுவூர் வேலாயுத முதலியார்
11. கழுகுமலைத்திரிபந்தாதி
    மீனாட்சி சுந்தரக்கவிராயர்




### அரண்

நாட்டுக்குப் பாதுகாப்பு

**உயர்வு அகலம் திண்மை அருமை இன்நான்கின்
அமைவு அரண் என்றுரைக்கும் நூல்**

உயரமும் அகலமும் வலிமையும் அழிக்கமுடியாத அருமையும் ஆகிய இந்நான்கும் அமையப் பெற்றதே அரண் என்று நூலோர் கூறுவர்.

### Fortress

That the Outer walls of which have the four aspccts namely hight, Thickness, solidity and Impregrability is a fort, according to the experts on the subject

## LEARN YOUR ENGLISH

**Give one word for each group**

1 Any device that attracts iron or steel
2 A woman servant
3 The postal system of service
4 The chief support
5 The Larger part
6 Ill - will
7 Sugar obtained from starch
8 To control in doing
9 Many in number and kind
10 A loose outer garment
11 A long distance race
12 A female horse
13 The legal union of a man and a woman
14 Of the male sex
15 A disguise covering the face.

1. magnet 2. maid 3. mail 4. mainstay 5. major 6. malice 7. maltose 8. manage 9. manifold 10. mantle 11. marothon 12. mare 13. marriage 14. masculine 15. mask.

உ

## கடவுள் திருவுருவங்கள்

கடவுள் திருவுருவங்கள் என்னும் விக்கிரகங்கள் காணப்படும் பொருளைக்கொண்டு காணப்படாத பொருளையும், தெரிந்த பொருளைக்கொண்டு தெரியாத பொருளையும் வருவித்துக் கற்பிப்பதாகும்.

தாலத்தின் மரங்கள் காட்டித்
தனிப்பிறை காட்டுவார்போல்
ஆலத்தின் உடுக்கள் காட்டி
அநந்ததி காட்டுவார்போல்
தூலத்தை முன்பு காட்டி
சூக்கும சொரூபமான
மூலத்தை முன்பு காட்ட
முனிவர் தொடங்கினரே''.
திருச்சிற்றம்பலம்

உரையற்ற தொன்றை உரைசெய்யும் ஊமர்காள்
கரையற்ற தொன்றைக் கரைகாண லாகுமோ
திரையற்ற நீர்போல் சிந்தை தெளிவார்க்குப்
புரையற் றிருந்தான் புரிசடை யோனே.
— திருமூலர்

அன்றுந் திருவுருவம் காணுதே யாட்பட்டேன்
இன்றுந் திருவுருவம் காண்கிலேன் — என்றுந்தான்
எவ்வுருவோ நும்பிரான் என்பார்கட் கென்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்னுருவ மேது.
— காரைக்காலம்மையார்

மைப்படிந்த கண்ணுநுந் தானுங் கச்சி
மயானத்தான் வார்சடையான் என்னினல்லான்
ஒப்புடைய னல்லன் ஒருவ னல்லன்
ஓரூர னல்லன் ஒருவம னில்லி
அப்படியு மந்நிறமும் அவ்வண்ணமும்
அவனருளே கண்ணுகக் காணினல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணுதே.
திருச்சிற்றம்பலம்

## பிரபவ! நீ வாழ்க!

பிரபவ! நீ ஆண்டுகளுள் ஒன்று. எங்களை ஆளும் ஒன்பது கோள்கள்போல எம் வாழ்வை மலர்த்தும் அறுபது ஆண்டுகளுள் நீயும் ஒன்று. சென்றமுறை நீ ஆடல் புரிந்தபோது, மகாத்மா காந்தியடிகள் எங்கள் ஈழவளநாடு காண இங்கே எழுந்தருளினர். அதே காலத்தில்தான் வண்ணை வீரவாகு முருகேசர் கந்தையா பிள்ளை தம் பாரியார் மீனுட்சிப்பிள்ளை சமேதராய் மில்க் வைற் ஸ்தாபனத்தை ஆரம்பித்தார். அந்தக் காலத்திலேதான் ஒரு கோணத்தை ஆளவல்ல திருவோணக் காரணய மைந்தன் கனகராசா அவர்களும் பிறந்தார். குழந்தையொன்று பிறப்பதன்முன் தாயிடம் முலைப்பால் உண்டாகிவிடுவதைப் போல, கனகராசா அவர்கள் அதிபராவதற்கு வாய்ப்பாகத் தந்தையார் மில்க் என்று தொடங்கும் சவர்க்காரத் தொழிலகத்தை ஆரம்பித்து வசதிவாய்ப்புச் செய்தார்.

பிரபவ! நீ அன்றுபோய் இன்று வந்தாய். எங்கள் வாழ்விலும் வளத்திலும் எத்தனை மலர்ச்சி, எத்தனை மாறுதல். மாறுதல்கள் யாவும் நன்மைக்கேயாய் மலர்ந்தன. உள்ளது போகாது. இல்லாதது வாராது என்னும் சற்காரியவாதங்கண்ட சைவர்கள் நாம்.

பிரபவ! உன் பின்வந்த அறுபது ஆண்டுகளின் அமைவை உன்னில் தொடங்கி, உன்னை அடையும்வரையில் எண்ணிப்பார்க்க விருப்பமாயுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1 | பிரபவ 1927 | 31 | ஏவிளம்பி |
| 2 | விபவ | 32 | விளம்பி |
| 3 | சுக்கில | 33 | விகாரி |
| 4 | பிரமோதுத | 34 | சார்வரி |
| 5 | பிரசோபத்தி | 35 | பிலவ |
| 6 | ஆங்கீரச | 36 | சுபகிருது |
| 7 | ஸ்ரீமுக | 37 | சோபகிருது |
| 8 | பவ | 38 | குரோதி |
| 9 | யுவ | 39 | விசுவாசு |
| 10 | தாது | 40 | பராபவ |
| 11 | ஈசுர | 41 | பிலவங்க |
| 12 | வெகுதானிய | 42 | கீலக |
| 13 | பிரமாதி | 43 | சௌமிய |
| 14 | விக்கிரம | 44 | சாதாரண |
| 15 | விஷு | 45 | விரோதிகிரு |
| 16 | சித்திரபானு | 46 | பரிதாபி |
| 17 | சுபானு | 47 | பிரமாதீச |
| 18 | தாரண | 48 | ஆனந்த |
| 19 | பார்த்திப | 49 | இராட்சத |
| 20 | விய | 50 | நள |
| 21 | சர்வசித்து | 51 | பிங்கள |
| 22 | சர்வதாரி | 52 | காலயுத்தி |
| 23 | விரோதி | 53 | சித்தார்த்தி |
| 24 | விகிர்தி | 54 | ரௌத்திரி |
| 25 | கர | 55 | துர்மதி |
| 26 | நந்தன | 56 | துந்துபி |
| 27 | விஜய | 57 | ருதிரோற்காரி |
| 28 | ஜய | 58 | இரத்தாட்சி |
| 29 | மன்மத | 59 | குரோதன |
| 30 | துர்முகி | 60 | அட்சய |

## எங்கள் அன்பான வேண்டுகோள்

கிழக்கிலங்கையில் கிண்ணியாவைச் சேர்ந்த உப்பாறு என்னும் இடத்து இந்து இளைஞர் மன்றம் சைவம் தமிழ் வளர்க்கிறது. சைவத்தமிழ்ப் பெரியார்கள் தங்களிடம் உள்ள மேலதிக நூல்களை அனுப்பி உதவி செய்தால் நல்லது. நாங்களும் ஓரளவு அனுப்பியுள்ளோம்.

இங்ஙனம்
மில்க்வைற் தொழிலதிபர்
க. கனகராசா ஜே. பி.

# உங்களுக்குத் தெரியுமா?

1 ஈ இறகுகள் அடிக்கும் வேகம்
நொடிக்கு 330 முறை

2 அவுஸ்திரேலியாவில் தாய்க்கறையானின் நீளம்
நான்கு அங்குலம்

3 நுளம்பின் உற்பத்தி வேகம்
ஒரு நுளம்பு 160,000,000,000 நுளம்புகளைத் தரும்.

4 எறும்பினங்களின் தொகை
8000

5 பூச்சி இனங்களின் தொகை
6,40,000

6 தேனீயின் வாழ்வுக்காலம்
ஆறுவாரம் (உழைப்பாளி)

7 மழைவீழ்ச்சியின் அளவு
ஒரு ஏக்கரில் ஓர் அங்குலம் பெய்வது
27000 கலன்

8 றேடியம் வீசும் ஒளிக்கதிர்கள்
அல்பா, பீட்டா, காமா

9 பந்து மேலே எழும்புதல், கீழே விழுதல் எது வேகம் கூட
மேலேஎழுதல்

10 குதிரை சக்திக்கு ஈடுசெய்வதற்கு மனிதசக்தி
பத்துப்பேர் வேண்டும்

11 பழைய காலத்தைக் குறிக்கும் ஆண்டு
கி. பி. 676 முன்

12 கிரேக்கரின் பழைய தெய்வங்களின் தொகை
30,000

13 பெண்கள் 1914ஆம் ஆண்டுக்கு முன் வாக்குரிமை பெற்ற நாடுகள்
அவுஸ்திரேலியா, நியூசிலந்து, பின்லாந்து, நோர்வே சுவீடின்.

14. அராபியர் நாயைத்தடவும் கை
இடக்கை

15 சாதாரண அமெரிக்கன் வாழ்நாளில் உண்ணும் உணவின் நிறை
45 தொன்

16 ஒரு றாத்தல் சீனியில் உள்ள பருக்கைகளின் தொகை
22, 60, 000

17 வெண்ணிற முட்டை, பிறவுண்நிற முட்டை இலகுவில் உடைவது
வெண்ணிற முட்டை

18 வெள்ளைப் பூண்டின் உயிர்ச்சத்து
C இனம்

19 அமெரிக்கர் வாழைப்பழத்தைக் கண்ட ஆண்டு
1804

20 கோப்பிக்கு சீனி சேர்த்த ஆண்டு, இடம்
1625. கைரோ நகரம்

21 கொக்கோ பானம் உற்பத்தியான நாடு
அமெரிக்கா

22 ஒருகாலத்தில் நாணகமாகப் பாவிக்கப் பெற்ற விதைகள்
கொக்கோவிதைகள்

23 பூமியிலும் பார்க்கப் பெரிய கிரகங்கள்
வியாழன், சனி, யூரனஸ், நெப்ரியூன்

24 சூரியனும் கடலை அலைமோதச் செய்கிறது
ஆம்

25 பழைய உரோமானிய நாட்காட்டியின் நாள்கள்
302

26 மிகப்பெரிய சூரிய புள்ளியின் விட்டம்
100000 மைல்

27 கஸ்பியன் கடலில் நல்ல நீருள்ள இடம்
வொல்கா நதிவீழும் இடம்

28 நட்சத்திரங்களின் நிறங்கள்
சிகப்பு, வெள்ளை, நீலம், மஞ்சள்

29 கடல் நீரின் உப்பின் வீதம்
3·5%

30 தொலை நோக்கி இல்லாமல் பார்க்கக்கூடிய நட்சத்திரம்
9000

31 ஜிப்ரோல்ரர் தொடுவாயின் அகலம்
14 மைல்

32 மழைத்துளியில் உள்ள வேறு பொருள்
தூசி, உப்பு

33 நாங்கள் நாள்தோறும் சூரியனைச் சுற்றிவரும் வேகம்
16,00000 மைல்

34 சூரியவட்டத்தின் அப்பால் உள்ள கிரகம்
சிக்னஸ்

35 நெப்போலியனின் மரணத்துக்கு காரணம்
கான்சர்

36 நெப்போலியன் இறந்த நாள்
1821-5-5

37 எகிப்தியரின் மிகப்பழைய மருத்துவன்
ஜோசர்

38 லெனின் என்னும் பெரியாரின் இயற்பெயர்
விலடிமிர் இலறிச் யூலியனவ்

★ குளப்பணி செய்து குதூகலித்த தொழிலகம் ★

## உங்களுக்குத் தெரியுமா?

39 அரிஸ்ரோட்டில் ஞானியை ஆதரித்த பேரரசன்
மகா அலெக்சாண்டர்

40 அனேக கண்டுபிடிப்புக்களால் பெயர்பெற்றவர்
தோமஸ் அல்வா எடிசன்

41 மனிதவுடலில் நாடி நாளம் முதலிய இரத்த குழாய்களின் மொத்தநீளம்
100000 மைல் நீளம்

42 மனித எலும்பின் ஆக்கத்துக்குப் பயன்படுவது
கல்சியம்

43 நம்பியர். நங்கையர் இருவருள் பல்நோவுக்கு அதிகமாக ஆட்படுபவர்
நங்கையர்

44 ஆறடி உயரமுள்ள ஆண்மகனின் தகனத்தின்பின் சாம்பலின் நிறை
எட்டுறுத்தல்

45 மாமிசம் அதிகமாக உண்ணும் மிருகம்
அலெஸ்காகரடி

46 ஆபிரிக்கயானை, இந்திய யானை - நீளமான தந்தங்கள் உள்ளது.
ஆபிரிக்கயானை

## அருள் விருந்து

(ஆதாரம் - தர்மசக்கரம்)

1 ஆசையுள்ளவன் தியாகத்தை அறியான்.
2 நல்லவன் எண்ணம் வீண் போவதில்லை.
3 திரிகரண சுத்தி சன்மார்கத்துக்கு ஏது
4 அமைதி உள்ளவன் இணக்கம் உள்ளவன்
5 தன்னைக் கட்டி ஆள இன்பம் தானே வரும்
6 மனத்தோடு போராடுபவன் பண்பாடு அடையவில்லை
7 ஆசையும் சினமும் எண்ணத்தைச் சிதைக்கும்
8 பணி விடை புரிதல் மேலான சமயம்
9 வீரன் எதைக் குறித்தும் முறையிடுவதில்லை
10 நிறை மொழி மாந்தர் தூய்மையுடையவர்
11 பொறுத்திருப்பவனே புகழ் பெற்ற அறிவாளி
12 சத்தியம் எல்லோருக்கும் பொதுவுடமை
13 தன்னைத்திருத்தியமைத்தவன் மகா மேதை
14 சுயநலப்பற்றை விடப் பெரிய நரகம் இல்லை
15 பயனற்றவற்றை ஆராய்பவன் பாமரர்
16 தூய அறிவும் நுண்ணறிவும் ஒன்றே
17 நல்லன செய்தல் பெரிய பிரார்த்தனை
18 அன்பிருந்தால் அரும்பணி ஆற்றலாம்
19 நல்ல ஆட்சி முறை எவரையும் புறக்கணிப்பதில்லை
20 நல்ல உள்ளத்திற்குப் பேசும் மொழி தேவையில்லை

## தமிழே! தமிழே! தாயே! தமிழே!

1 கண்ணுதற் கடவுளும் பண்ணுற ஆராய்ந்த தமிழ்
2 தொண்டர் நாதனைத் தூது விடுத்த தூயதமிழ்
3 காதுக்கினிய ஓசை ஒழுகும் கன்னித்தமிழ்
4 தாயும் தந்தையும் கொஞ்சி என்னைத் தழுவிய தமிழ்
5 தெலுங்கு கன்னடம் துளுமலையாளம் தோன்றும் தமிழ்
6 பழகப்பழக ஆர்வம் உண்டாக்கும் அருமைத்தமிழ்
7 சிறிதளவு பயின்றாலும் இன்பந்தரும் இன் தமிழ்
8 திருவாசகம் தீந்தமிழ் என்று போற்றும் மொழி
9 தமிழ் என்ற சொல்லுக்கே இனிமை என்பது பொருள்
10 தமிழும் இனிமை பெயரும் இனிமை பொருளும் இனிமை
11 கூடலில் ஆய்ந்த ஒண் தீந்தமிழ் குறைவில்லாத மொழி
12 பாட்டும் கூத்தும் பணி செய்த பைந்தமிழ்
13 ஞாலம் கடந்ததில் காலம் கடந்த கன்னித்தமிழ்
14 உழவும் உழைப்பும் நெசவும் பழக்கிய தமிழ்
15 எப்பாவலரும் ஏற்கும் முத்தான முத்தமிழ்
16 தென்றலெனச் சுகம் பேசும் தேனையதமிழ்
17 தென்னுட்டவர்க்குத் தெவிட்டாத தீந்தமிழ்
18 பாவகை நிறைந்த பண்டைத் தமிழ்
19 கலைச்சொல்வளம் நிறைந்த கன்னித்தமிழ்
20 திறன் மிகவுடைய திருவார் தீந்தமிழ்
21 சித்தர்கள் போற்றிய சித்திரத் தமிழ்
22 சிறப்பாய் எளிதில் பொருள் தரும் மொழி
23 புத்தமுதூட்டும் பூரண மொழி
24 முத்தமிழ் முருகன் மொழிந்த நற்றமிழ்
25 கண்ணினும் அருமைக் கண் மொழிந்த தமிழ்
26 கருத்தினில் ஊறும் கனிவுறு தமிழ்
27 மண்ணில் பழைமை மாசறு தமிழ்
28 இனிமை சொல் விருந்து ஊட்டும் தமிழ்
29 பண்ணிலும் பாவிலும் பழுத்த பைந்தமிழ்
30 தொன்மைப் பெரும்புகழ் தொடுத்த செந்தமிழ்
31 யாப்பொடும் இசையொடும் யாத்த தமிழ்
32 கட்டுரைவரிசைகள் கண்ட கவினுறு தமிழ்
33 ஓங்கிய சிறப்பின் உயர்ந்த ஒண்தமிழ்
34 அழகுறு வடிவொடு ஆய்வுயர் அருந்தமிழ்
35 ஆழமும் அகலமும் அமைந்த அருந்தமிழ்
36 வித்தகம் நிரம்பிய வியப்புறு தமிழ்
37 செம்பொருட் சைவம் செழித்திடும் தமிழ்
38 நெஞ்சிருள் நீக்கிடும் செவ்விய தமிழ்
39 சமயங்கள் வளர்த்த சால்புடைய தமிழ்
40 ஏழிசை கண்ட சீருடைச் செந்தமிழ்
41 ஆராய்வார்க்கு ஆரா அமுதனைய தமிழ்

## தமிழே! தமிழே! தாயே! தமிழே!

42 நாட்டவர்க்கு நல்லறிவை ஊட்டும் தமிழ்
43 புலமை மதத்தால் பூரித்த பூந்தமிழ்
44 பாவேந்தர் பாட்டிசைத்துத் தந்ததமிழ்
45 நாவேந்தர் நாவசைத்து நவிலும் தமிழ்
46 அன்பின் இலச்சினையை அகம் கொண்ட தமிழ்
47 தென்பாண்டி நாட்டின் தீந்தமிழ்
48 இந்நிலம் தழைக்க எளிவந்த இன்தமிழ்
49 பாட்டும் தொகையும் மிக்க பைந்தமிழ் மொழி
50 தற்பரன் அருள் போல் என்றும் தழைத்திடும் தமிழ்
51 இலக்கியமும் இலக்கணமும் இனிதாய்ந்த இன்தமிழ்
52 ஏழ்கதிரின் இயக்கமென எமையூக்கும் தமிழ்
53 வாழ்நிலத்தோர் கையேந்தும் வளமிக்கமொழி
54 பாண்டியர்கள் முன்வளர்த்த பைந்தமிழ்
55 வேண்டிய வளங்கள் உள்ள வித்தகத் தமிழ்
56 குறிஞ்சிவளம் கண்டு குலாவிய தமிழ்
57 முல்லை வளம் கண்டு மூவாத தமிழ்
58 மருதவளம் கண்ட மாண்புடைய தமிழ்
59 நெய்தல் வளம் கண்ட நெடுங்காலத் தமிழ்
60 பாலைவளம் கண்டு பாட்டிசைத்த தமிழ்

தமிழே, தமிழே, தாயே வணக்கம்.

## பென்சமின் பிராங்லின் மொழிந்தவை

1 அவள் எல்லாவற்றுக்கும் சிரிக்கிறாள். அவளின் பற்கள் அழகான படியாற்போலும்
2 கடவுள் நோய்களை நீக்குகிறார் ஆனால் வைத்தியர்கள் கூலியைப் பெறுகிறார்கள்
3 தன்னைத்தானே காதல் செய்பவனுக்கு எதிரிகள் இருக்கமாட்டார்கள்
4 கடன்பட்டோரிற் பார்க்கக் கடன் கொடுத்தவர் நினைவாற்றல் உள்ளவர்
5 வெள்ளம் போல் சொற்களைப் பேசுபவர் கருத்தை ஒழுகவிட்டுவிடுகிறார்கள்
6 மருந்துகளின் உபயோகமின்மையை அறிந்தவர் சிறந்த வைத்தியர்
7 உன்செல்வம் உனதேயானால், மறுவுலகுக்கு எடுத்துச் செல்லலாமே
8 உன் நண்பர்களுள் உபத்திரவம் தருபவருக்கு ஒருமுறை கடன் கொடுத்துப்பார்
9 கலியாணஞ் செய்யுமுன் கண்ணை அகலத்திறந்துபார் செய்தபின் கண்ணை அரைவாசி மூடிக்கொள்
10 அயலவனை நன்றாக நேசி. ஆனால் எல்லைவேலியைப் பிடுங்கிவிடாதே
11 பணக்கார விதவைகளுக்கு நல்ல மகிமையுண்டு

## சாணக்கியன் சொன்னவை

1 சோம்பேறி தனக்குக் கிடைத்ததையும் காப்பாற்ற மாட்டான்
2 சோம்பேறியின் தேட்டம் வளர்வதில்லை
3 குடிகாரன் பசுப்பாலைக்கூட மதிக்கமாட்டான்.
4 விதைப்புக்காரனுக்கு வானமே துணை
5 மருந்தானால் கள்வனிடமும் எடுக்கலாம்
6 நன்மை தீமை பிசாசையும் பின் தொடரும்
7 பணம் இருந்தால் அவலட்சணமும் அழகாகும்

## மூன்றுவிதமானகைகள்

செயல்கள் யாவுக்கும் கைப்பழக்கம், கைவரிசை கைவண்ணமே வேண்டும். இயந்திர மயமான செயல்களுக்கும் பொத்தானை அழுத்துவதற்குக் கையசைத்தல் வேண்டும், இங்ஙனம் நடைபெறுக என நாம் நினைக்கச் சங்கற்ப மாத்திரத்தில் எதுவும் நடைபெறுவதில்லை.

மில்க்வைற் தாபனத்தில் மூன்று விதமான கைகள் உள்ளன. உழைக்குங் கைகள் மிகப்பல. உதவும் கை ஒன்று, உதவுவதைத் தடாத கைகள் இரண்டு.

மில்க்வைற் தொழிலாளர்களின் கைவண்ணம் அருமையானது. வளமானது. தொழிலதிபரின் கொடுக்குங்கை, தசரதசக்கரவர்த்தியின் தருகை போல நீண்டது. இவர் தினமும் கொடுத்துக் கொண்டே இருக்கிறார். பிரசுரங்களோடு, தான் முயன்று தயாரிக்கும் நாற்று மேடையிலிருந்து செடிகொடிகள் கன்றுகள், விதைகள் கொடுத்த வண்ணமே இருப்பார். இவருடைய சகதர்மினி இவர் கொடுப்பதைத் தடுப்பதில்லை. ஆகவே அவருடைய கைகள் தடாதகைகள். உழைக்கும்கை, உதவும்கை, தடாதகை மிகமிகப் பொருத்தமானவை. வேளாளர்கை கொடுக்கும்கையாகையால் திருக்கை என்றும் பிரபந்தம்பாடப் பெற்றகை. சடையப்பவள்ளலின் கை திருக்கை. தெய்வமூர்த்தங்களின் வரந்தருகையும், அபயகையும் வேறு. நாங்கள் மனிதர் மனிதருள் கொடுக்கப் பழகியவர் பெரியவர். சிரம்தாழ்த்திக் கரம் கூப்பி மரியாதை செய்வர். அவருடைய காரைக் கண்டதும் எழுந்து மரியாதை செய்யும் முதலாளிமார் மிகப்பலர். அரவணைத்து முத்தமிடும் முதலாளிமாரும் இருக்கின்றார்கள்.

### வித்தையில் விருப்பம்

கனகராசா அவர் கண்டது கற்றுப் பண்டிதரானவர். அவருக்குப் பன்முகஞானம் அதிகம். நன்றாக இரவு பகலாக வாசிப்பவர். வீதிகள்தோறும் வாசிகசாலைகள் தோன்றக் காரணமானவர். நகரங்களில் நூல் நிலையங்களில் புத்தகப் பொலிவுக்கு உதவுபவர். அன்பளிப்பு என்னும் நட்டமுறைக்கு நாடறிந்த உதவும் கரம் அவர். எல்லோரும் படித்தல் வேண்டும் என்று விரும்புபவர். தாமே பல நூல்களை அச்சிட்டு ஆயிரக்கணக்கில் பங்கீடு செய்பவர். அறிவாளிகளை அண்டிவாழ விரும்புபவர். படித்த மேதைகளின் வீடுகள் தோறும் தேடிச்சென்று பணிந்து வணங்குபவர்.

★ உற்பத்தித்திறனில் உயர்வுகண்ட தொழிலகம் ★

## குரு விசுவாசம்

காடுகளில் கனத்த மரநிழலிலும் கொட்டில்களிலும் குடிசைகளிலும் குருகுலக்கல்வி ஆரம்பித்து மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. காடுகளில் ஒதுங்கி வாழ்ந்த முனிவர்கள் தனித்தும் தேவியரோடும் காடுபடு திரவியங்களைப் பயன்படுத்தி வாழ்ந்தனர்.

குருகுலக் கல்விபெறச் சென்ற சிறுவர்களின் முதற் கடமை குருவுக்குப் பணி விடைபுரிதலேயாம். விறகு பொறுக்கிவந்து கொடுத்தும், தர்ப்பை கொய்து வந்து கொடுத்தும், பசுக்களை மேய்த்து மீட்டு வந்துகொடுத்தும் பணி செய்தார்கள். பணிசெய்யச் செய்யப் பண்பாடு உண்டாகி மலரும் போதே மாணுக்கரும் மானுடராக உருவானார்கள். "பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ" என்றாற்போல "எல்லோரும் மானுடராவரோ" என்றும் ஒரு வாக்கு வழங்குகிறது. குருகுலத்தில் குருவிசுவாசம் அரும்பிப் போதாகி மலர்வது வழக்கம், மலர் காயாகிக் கனிவது வாழ்க்கைப்படி.

கனகராசா அவர்கள் கொட்டடியில் பிறந்தவர். கொட்டடியில் செல்லையா செல்வர் என்பவரின் மகளே மீனாட்சிப்பிள்ளை. மீனாட்சிப்பிள்ளை கொட்டடியில் தம் மகவை ஈன்றார். மைந்தன் கனகராசா, கொட்டடி நமசிவாயம் செட்டியார் பெயரால் வழங்கும் நமசிவாய வித்தியாலயத்தில் அரிச்சுவடி பயின்று, ஆரம்பக்கல்வி பெற்றபின், குளங்கரை மாணவர் பாடசாலை, பீற்றேஸ் பாடசாலை என வழங்கிய ஹில்னர் கல்லூரியில் ஆங்கிலம் பயின்றார். அங்கே அதிகம் படிக்காத அவர் அருமையாக ஆங்கிலம் பேசுகிறார் என்றால் அக்காலத்துப் படிப்பின் ஆழத்தை அறியலாம்.

அவர் தம்மைப் படிப்பித்த ஸ்பென்சர், தங்கராசா முதலான ஆசிரியர்களை நினைந்து உருகுவார். அவர்களைக்கண்டால் காரில் ஏற்றி வந்து உபசரித்து வணங்குவார்.

### தொழிற்பயிற்சி

பதினொராம் வயதில் புகையிரதப் பிரயாணத்திற்கு அரைச்சீட்டுப் பெற்று. கம்பளையில் சுருட்டுக் கடைநடத்திய மைத்துனன் கார்த்திகேசு செல்லையா என்பவரின் உதவியாளனானர். உதவியாளனாய் எடுபிடி வேலைகள் செய்தபோதே தடல்புடலாகச் சிங்களம் பேசவும் பழகிக் கொண்டார். வியாபார நுணுக்கங்களையும் பழகிவந்தார்.

### ஆசிரியர் வேலை

இடையில் தமையனார் இரத்தின கோபால் என்பார் மலை நாட்டுத்தோட்டப் பகுதியில் உத்தியோகம் பார்த்தவராகவே, அவர் அழைப்பை ஏற்று அங்குச் சென்று தோட்டப் பாடசாலை ஆசிரியராகி அரும்பணி புரிந்தார் குழந்தைகளோடு குழந்தையாக ஓடிவிளையாடி, விளையாட்டு மூலம் கல்விகற்பித்துத் திறமையுற்ற போது. அவரிடம் குழந்தையுள்ளம் நிரந்தரமாக இடம் பிடித்துக்கொண்டது. பிறகு றப்பர் மேக்கர். இவ்வாறாகத் தம்பிமார் லோகநாதன், பவநாதன் என்பவர்கள் உத்தியோகக் கல்வி பயிலவே, தந்தையார் கந்தையா பிள்ளை தம் மைந்தன் திருவோணத்தில் பிறந்த கனகராசாவை அழைத்துத் தொழிலகத்து ஒரு கோணத்தை ஆளுமாறு நியமித்தார்.

### தொழிலதிபர்

கனகராசா நாட்டுக்குதவும் நல்லதம்பியாய்ச் சைக்கிள் வண்டியிலும், மாட்டு வண்டியிலும் சவர்க்காரம் விநியோகம் செய்யப் புறப்பட்டார்.

பாலொழுகும் பைம்முகமும் பாராமல் வெயில் மழை பாராமல் வியாபாரத்தைப் பெருக்குவதிலும் ஆதரவாளர்களை அணைப்பதிலும் அவர் நிபுணரானார். அவர் களத்தில் இறங்கி நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் பழகிய பயிற்சி விசேடத்தால், வளர்முகவியாபாரிகளோடு நல்ல நண்பராயினார். இன்று சொகுசாகக் காரிலேறித் திரியும் போதும் பழையவாசனை வீச அவர் வியாபாரிகளிடம் சுகம் விசாரிக்கும்போது, பிரதித் தொழில் என உளவியலார் கூறும் பழக்கத்தின் வண்ணம்.

## நன்றிக்குமேல் நன்றி

### யார் யார் விவசாயப்பணிக்கு உதவினார்கள்

மில்க்வைற் விவசாயப்பணி இன்று பிரதேசத்தில் வெகுவாகச் சுருங்கி விட்டபோதிலும் இப்பணிக்கு வரையாது உதவி செய்தவர்கள் வழங்கியவர்கள் எங்கள் வாழ்த்துக்கும் பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியவராவர்.

திருமதி குலசிங்கம் மின்சாரநிலைய வீதி முருங்கைத் தடிகள் தந்தார்கள். சுந்தரம் மருந்துக்கடைச் சுந்தரம் பிள்ளை வைத்தியர் மாதுளங்கன்றுகள், எலுமிச்சங்கன்றுகள் தந்தார்கள். அண்ணா தொழிலதிபர் பப்பாக்கன்றுகள் புல்நறுக்குகள் தந்தார்கள். அச்கராயன் குளம் கோபால பிள்ளை தென்னம் பிள்ளைக்கன்றுகள் தந்தார்கள். சீனியர் ஒழுங்கை சீனிவாசகம் அவர்கள் ஆசினிப்பலா தந்தார்கள். திருநெல்வேலி விஜயரட்னம் பப்பாக் கன்றுகள், தென்னம் நாற்றுகள் தந்தார்கள். பண்டாரக் குளம் ராஜன் குடும்பத்தினர் விளாத்திக் கன்றுகள் தந்தார்கள். தொழிலகச் சாரதி சுகுமார் வருடம் தோறும் ஏராளம் நெல்லி விதை சேகரித்து தருவார். கொடிகாமம் பண்டிதர் முருகேசு நெல்லிக்கன்றுகள் தந்தார்கள். கலாநிதி மோகனதாஸ் தென்னம்பிள்ளைகள் தந்தார்கள். இளவாலை கோடக்கன் இளைப்பாறிய அதிபர் ஆறுமுகம் நெல்லிக்கன்றுகள் தந்தார்கள். இவர்கள் தந்தவை பொதுமக்களிடம் விநியோகமாகி வளர்கின்றன. இவைவளர, இவர்கள் வாழ்வார்களாக.

### வேளாளப்பெரியார்கள்

திருநாவுக்கரசு நாயனாரை உள்ளிட்டுப் பதின் மூவர் வேளாளராயவர்கள். ஔவையார் பூமிதிருத்தி உண். போனகமென்பது தான் உழந்தட்டல் என்றெல்லாம் பாடியுள்ளார். பட்டினத்தார் தாம் செய்த ஆன்மிக வேளாண்மையைப் பற்றி அருமையாகப் பாடியுள்ளார் "அஞ்சக்கரம் எனும் கோடாலி கொண்டு இந்த ஐம்புலனும் வஞ்சப் புலக்காட்டை வேரறவெட்டி வளங்கள் செய்து விஞ்சத்திருத்திச் சதாசிவம் என்கின்ற வித்தை நட்டுப் புஞ்சக்களை பறித்தேன் வளர்த்தேன் சிவ போகத்தையே"

**★ உள்ளூர்த் தொழில்களை ஊக்கும் தொழிலகம் ★**

## பள்ளுப்பிரபந்தம்

தொண்ணூற்றுறு வகைப் பிரபந்தங்களுள் பள்ளு என்னும் பிரபந்தம் உழவுத்தொழிலின் செய் முறைகளைச் சீராகக் கூறுவது. கதிரமலைப்பள்ளு காலத்தால் முந்திய பிரபந்தம். அது யாழ்ப்பாணத்துத் தமிழருக்கு ஒரு பெருமை. நாட்டுப்புற இலக்கியங்கள் வேளாண்மையை விரிவாககக் கூறுவன. வேளாண்மை செல்வாக்குப் பெற்ற தொழில். மன்னனது வெற்றி ''உழுபடை ஊன்று கால் மருங்கின் ஈன்றதன்பயனே'' என்று புறநாநூறு கூறுமள வில் சிறந்திருந்தது வேளாண்மைக்குரிய வயல்கள் தோட் டங்கள் நிறைந்தநிலம் மென்புலம் எனப்பெயர் பெற் றது. அங்கே நன்செய் நிலங்கள் நிறைய இருந்தன.

## வேளாண்மையில் பெண்கள்

இன்று பெண்கள் ஆண்களேடு சரிநிகராக உத்தி யோகங்கள் பார்க்கின்றனர். இந்த நாகரிகம் மிகப் பழைய காலத்திலே வேளாண்மையில் நடைபெற்றது. பெண்கள் ஆண்களோடு தோள் கொடுத்துச் செய்த தொழில் வேளாண்மையையேயாம். நடவுவேலை, நீர் பாய்ச்சுதல், களைபறித்தல், அருவி வெட்டுதல், சுத்தப் படுத்துதல், கஞ்சி கூழ் உணவுகொடுத்தல், காவல் காத் தல் முதலியனவில் கைகொடுத்தவர் தாய்க்குலத்தவரே யாம். கால்நடைவளர்ப்பில் முல்லைநில வேலைகள் முற் ருகப் பெண்கள் கையில் இருந்தன. தமிழர் பதினெட்டு வகையான கூலங்களை அறிந்திருந்தனர். கூலவாணிகன் சாத்தன் பெரும்புலவனுயிருந்தார்.

---

## நாள் மங்கலம்

அன்று சாதாரணமான நாள்தான். ஆனுல் சோம வாரம் எனப் புனிதமாகக் கருதப்பெறும் திங்கட்கிழமை; அதோடு வைஷ்ணவ ஏகாதசியும்கூட. இன்னும் சாதுர் மாசிய விரத பூர்த்திநாள். சுக்கிலபட்ச காலமாதலால் பிறை நன்ருக வளர்ச்சியுற்றிருந்தது.

காலம் ஓரளவு சோதனைக்குரிய காலம்தான். மக்கள் தங்கள் வீடுகளிலேயே வாழமுடியாமல் புகலிடம் தேடி யொதுங்கிய காலம். அன்னை காமாட்சியும் அழகன் முருகனும் ஆயிரக் கணக்கானேருக்கு அடைக்கலம் கொடுத்து அருள்புரிந்த காலம்,

காமாட்சித் தாயின் அடுத்த வீட்டுக்காரன் மில்க் வைற் தொழிலதிபர். அவரும் குடும்பமும் மற்றெல் லோரையும் போல அம்பிகையின் அருளொளியின் பகலிர வாவதறியாமல் ஒதுங்கி இருந்தார்கள்.

அன்று நவம்பர் இரண்டாம்நாள். அது தொழிலதி பரின் பிறந்தநாள். அன்றி இம்முறை அறுபதாம் வயது நிறைந்தநாள். இன்னும் ஒரு சிறப்பு மில்க்வைற் தொழி லகத்திற்கும் அறுபது ஆண்டுகள் நிறைந்த மணிவிழா நாள்.

பொன்விழாப் பொலிவைக்கண்டு பூரித்த கண்க ளுக்கு மணிவிழாவின் ஓசையோ ஒலியோ காணவில்லைத் தான். என்ருலும் அன்னையின் அருட்பிரவாகத்தில் எல் லாம் அமைதி.


ஆயிரவர் ஊண் உறக்கமின்றியும் இருந்த இருட் காலம் அது. ஆனுல் அன்னையின் முன்னிலையில் எல்லாம் நன்மையாகவே அமைந்தன.

திருக்கோயில் அர்ச்சகர்கள், அறங்காவலர்கள் நுட்ப புத்தியுள்ளவர்கள். தொழிலதிபரின் இரட்டை விழாவை இயன்றமட்டில் தேவியருளால் சனரஞ்சகமாகக் கொண் டாட ஏற்பாடு செய்தனர்.

அறுபதில் பாதி முப்பது. தொழிலதிபர் முப்பது கொத்தரிசி கொடுத்தார், அமைதி காப்போரின் கழுகுக் கண்ணுக்குச் செய்தி எட்டிவிட்டது. ''அச்சாநெய்'' என்று பூரித்தனர். வேண்டியளவு சர்க்கரை நெய் கொண்டுவந்து கொடுத்து வாழ்த்தினர்.

அமுது படைக்கப்பெற்றது. ஆவி அன்னைக்கும் அவிசு அன்பர்களுக்கும் ஆயின. அந்தணர் நான்மறை நவின்று நல்லாசி கூறினர். அறுகுசாத்தி வாழ்த்தினர். அங் கிருந்த அன்பர்களுள் மூத்தவர் அயல்வீட்டு வாசி முன் னுள் உப தபாலதிபர் இராசையா. அவரே அடியார்கள் சார்பில் முதல் வாழ்த்தைத் தொடங்கினுர். அன்பர்கள் வாழ்த்து வாழ்த்தென்று வாழ்த்தினர். அறுபது கண்ட வரும் மற்றவரை ஆசீர்வதிப்பதற்குத் தகுதி பெற்ருர். அவர் நாடுவாழ நாம்வாழ என்று அன்னையை முன்னிட்டு வாழ்த்தினுர். அங்கிருந்த ஆயிரவரும் அமுதுகண்ட களையில், இனியென்ன அடுத்துவரவேண்டிய எண்பதாம் ஆண்டின் விழாவையும் எல்லோரும் காண்போமாக என்று வாழ்த்தினுர்கள்;

தர்மம் தழைக்கத்
தம்பி நீ வாழ்க!



புறநாநூற்றுப்புலவன் அன்று வாழத்தியவொலி இன்றும் கேட்கின்றது.

''ஒன்றுபத்தடுக்கிய கோடிகடை இரீகிய
பெருமைத் தாகநின் ஆயுள்தானே''

இன்னும் பதிற்றுப்பத்தும் நீண்ட வாழ்நாள் உண் டாக என்று என்று அன்றே வாழ்த்தியுள்ளது இங்கே இன்றும் அமைவதாக.

''நின் நாள் திங்கள் அனையவாக திங்கள்
யாண்டு ஓர் அனையவாக! யாண்டே
ஊழியனையவாக! ஊழ்
வெள்ள வரம்பினவாக''

★ அன்பர்கள் பலரின் ஆதரவுபெற்ற தொழிலகம் ★



## அவிழ்த்துப் பாருங்கள்

### பிசி

1 தங்கை தலையிலே பாம்பு
2 தச்சன் செய்யாத தேர்
3 தச்சன் செதுக்காத மரம்
4 தண்ணீரில் வெள்ளை
5 தலையில் முளைத்த இலையில்லா மரம்
6 கையுண்டு விரலில்லை
7 திரியில்லாத விளக்கு
8 தெரியப் பூக்கும் தெரியாமல் காய்க்கும்
9 தேய்க்க நுரைக்கும்
10 தொட்டால் மணக்கும் குடித்தால் புளிக்கும்
11 தோண்டுவான் முடங்குவான்
12 தோலிருக்கச் சுளைவிழுங்கி
13 நகரமாட்டாது நகராமல் இருக்காது
14 குந்தி அம்மா குடை பிடிக்கிறு
15 நரைத்த கிழவி ஆடுகிருள்
16 நல்லவர் கொள்ளும் தானம்
17 நாலுகாலுண்டு வீசவாலில்லை
18 நாலுகால் நகாரி வாலில்லா கடாரி
19 நித்தம் கொட்டும் சத்தம் இல்லை
20 பக்கத்திலிருப்பான், படுத்தால் மறைவான்

### பிசி - விடைகள்

1 பின்னல் 2 புற்று 3 வாழை 4 மீன் 5 மான் கொம்பு 6 சட்டை 7 சூரியன் 8 நிலக்கடலை 9 சவர்க்காரம் 10 எலுமிச்சம்பழம் 11 நாய் 12 வாழைப்பழம் 13 மணிக்கூடு 14 காளான் 15 புகை 16 நிதானம் 17 நாற்காலி 18 தவளை 19 கண்ணிமை 20 முதுகு

## உண்மை

உண்மை பேசி உத்தமனய் வாழ்க என்று சீடனை வாழ்த்திய குரு, உண்மை ஒன்றுதான் வெல்லும் என்றும் உபநிடத போதனைகளில் வற்புறுத்தினர். உபநிடதங்களும் வேதவாக்கியங்களும் உண்மையை வற்புறுத்தியுள்ளன. அவற்றின் வழிவந்த இதிகாசங்கள், புராணங்கள் தத்துவசிந்தனைகள் யாவும் உண்மையை வற்புறுத்துகின்றன. சங்ககாலப்புலவர்கள், திருவள்ளுவர், நீதிநூலார் எல்லோரும் உண்மையை, வாய்மை, மெய்மை என்று மனம், மொழி, மெய் ஆகிய கரணங்களுக்கும் புனிதம் கூறுவர்

சத்தியம் என்பதே உபநிடதவாக்கு. பழைய அரசுகள் சத்தியத்திலேயே அமைந்து, இரக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தன, அரசின் இன்றிமையாத அமைப்பு சத்தியமாகும். சத்திய மேவ ஜயதே என்னும் வாக்கியம் உண்மையின் வெற்றியை வற்புறுத்தியது, தெய்வங்களும் ஞானியரும் உண்மையே மேலான கதிக்கு வழி வற்புறுத்தினர். சத்தியம் என்பதே உண்மை வாய்மை மெய்மை என நிலவி வாழ்வை வளம்படுத்தியது. சத்தியம், சிவம், சுந்தரம் என ஒளி வீசியவை ஆன்மீக மலர்ச்சிக்கு அடிகோலுவனவாயின. வசிட்டர் வியாசர், சுகர், வான்மீகி, திருவள்ளுவர், யக்ஞவல்கியர் முதலானேர் சொன்னதும் சத்தியவாக்கேயாகும்.

## காற்றுள்ளபோதே

காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்பதற்குச் சாதாரணமான விளக்கம் நெல் அறுவடையில் வைக்கோல் வேறு நெல்வேறாக்கிக் கொள்ளும் வேலையாகும்.

ஆனல் புலவர் கீரனர் நல்லதொரு விளக்கம் கூறுகிறர். நம்முடலில் மூச்சுள்ளபோதே அதை ஒழுங்காக்கி, அதாவது யோகாசனம், பிராணயாமம் முதலிய வற்றல் ஒழுங்கு படுத்திச் சுகவாழ்வு பெறுதல் வேண்டும் என்பதாகும்.

சாதாரணமாகத் தடிமன், தலையிடி முதலாக வேறு பல நோய்களையும் அணுகவிடாமல் நம்மைக்காக்கத் தேரையர் சொன்ன விதிகளும் உண்டு. பழையபடி மட்பாத்திரத்தை நாடுமாறு யாரோ ஒருவர் குரல் எழுப்புகிறர். அதற்கும் செவிமடுப்போமாக

## என்றும் மரம் எங்கும் மரம்


அடேயப்பா என்றும் மரம், எங்கும் மரம் எந்த விழாவிலும் மரம். ஏதாவது ஒரு மரம் நடுங்கள் என்று வீடு தேடி, விளைநிலம் தேடிக் கொண்டு திரிந்து கொடுக்கின்ற ஒருவருக்குப் பதினைந்து ஆண்டுகளாக ஒரே பைத்தியம்

இவர் தமது ஓய்வு நேரத்தில் தாம் ஊரெங்கும் நாட்டிய, நாட்டக்கொடுத்த, நிழல் தருமரங்கள் விறகு தரும் மரங்கள் அழகு பூக்கும் மரங்கள் கனிதரும் மரங்கள் என்னவாயிருக்கின்றன என்று பார்ப்பதற்குச் சுற்றிப்பார்த்து மரங்களை வளர்த்தவர்களுக்குத் தொப்பி

(10ம் பக்கம் பார்க்க)

★ மரம் நாட்டும் பணியை மலர்த்திவரும் தொழிலகம் ★

## குளந்தோண்டும் கருவிகள் குவிந்து கிடக்கின்றன



கொட்டுமுரசு. ஆம் கேட்கிறது. என்னவாம்" இத் தாற் சகலருமறிவது, நாங்கள் எங்கள் வரண்ட நிலங்களில் வாழ்வளிக்கும் குளங்களை வரள விடுதலாகாது, ஏரிநிறைய நீரைத்தேக்குவதற்கு அவற்றை ஆழமாக்குதல் வேண்டும். உங்களுக்கு வேண்டிய மண்வெட்டி தாச்சிச்சட்டி, குப்பைவிருண்டி தரலாம். ஒத்துதவி முறையில் ஊரவர்கள் ஒன்று கூடி வாருங்கள் ஆயுதங்கள் தருகிறோம். நாங்களும் கை கொடுக்கிறோம். வரப்புயர நீருயரும் நீருயர நெல்லுயரும் நெல்லுயர் குடி உயரும். இதை நாமா உங்களுக்குச் சொல்லுதல் வேண்டும் சொல்ல வேண்டாம் செயற்படுவோம்.

## சுபீட்சம் தேவை

விவசாயம். உற்பத்திப் பெருக்கம் கட்டட நிர்மாணம், பகிரங்கவேலைகள், மின்சாரவசதி, சுரங்கம் துளைத்தல், மீன்பிடித்தல், முத்துக்குளித்தல் முதலியன நாட்டை வளம்படுத்துவதற்கு இன்னும் தேவை தென்றுடெனும் தமிழ்நாட்டில் வேளாண்மை, நெசவு. சுரங்க வேலை முதலியன அமோக விளைவுகளைத் தருகின்றன;

கமக்காரர் புதியமுறைகளில் அதிக விளைவைத் தரும் விதைகளும் விரைவில் விளைவு தரும் விதைவகைகளையும் கண்டு பயன் பெறுகிறார்கள். வேளாண்மைக்கு அடுத்ததாக நெசவுத்தொழில் தன்னிறைவு தருமளவில் நிறைவு பெறுதல் வேண்டும்.

திட்டமிட்டு நெல், கரும்பு விளைவிப்போர், கால மறிந்து ஊடுபயிராக உழுந்து, பயறு, பருப்புவகைகளை உண்டாக்கி மேலதிக விளைவைப் பெறுகிறார்கள்.

எந்தப்பயிரும் எந்தப்பழமரமும் தனிப்பட்ட சுவையும் சத்தும் தரும்

## அறுபது ஆண்டுகளுக்கு முன்

வீரவாகர் முருகேசர் கந்தையா என்பவரும் மனைவி மீனாட்சி என்பாரும் இல்லறம் நடத்திய காலம் ஒரு சோதனைக்காலம். எல்லாம் இறக்குமதியான காலம். நம்மவர் தங்கள் பாரம்பரிய கைப்பணி. கலைப்பணி என்பவற்றை மறந்து வெள்ளைக்காரரின் செப்படிவித்தைகளைக் கண்டு களித்தகாலம்.

இலங்கையர் பெரும்பாலும் கிராமவாழ்க்கை வாழ்ந்தவர்கள். கிராமத்தவர் தமக்குத் தேவையானவற்றைத் தாமே செய்து தம் நிறைவு கண்டவர்கள், குடிசைத் தொழில், கைத்தொழில்களில் திறமைபெற்றவர்கள்.

முற்காலத்தில் மரவேலை, இரும்புவேலை, செம்புவேலை, பொன்வேலை, சிற்பிவேலை, களிமண்வேலை, ஓவிய வேலை, நெசவுவேலை முதலான பல வேலைகளை அறிந்திருந்தனர்.

இவ்வேலைத்திறன்கள் வெள்ளைக்காரரின் இறக்குமதிப்பொருட்களின் முன் தளர்ச்சியடைந்தன. மஞ்சள் பூசிய முகம் சவர்க்காரக்கட்டிகளைக் கண்டது. உவர் மண் கண்ட உடைகள் உப்புச்சவர்க்காரங்களைக் கண்டன

இவற்றையெல்லாம் கண்ட கந்தையாவும் மீனாட்சியும் சிந்தித்தார்கள். அந்தக் காலத்தில் எங்கள் மத்தியில் கந்தையா எனப் பெயர் பெற்றவர்கள் பலர். நெடுவல், கட்டை, சிவலை, கறுவல், வேட்டி, ஆலாவரணம், பாவம், ஆவி, அண்ணாவி சென்ற முதலாய அடைமொழிகளைவிட பரியாரியார், சட்டம்பியார், வர்த்தகர் முதலான தொழில்கள் சம்பந்தப்பட்ட பெயர்களும் ஒரு புறமிருந்தார்கள். இன்னும் அவர்களின் பழைய ஊர்களின் பெயர்கள் சம்பந்தமாகப் பெயர் பெற்றவர்களும் இருந்தார்கள்.

இவ்வாறாக இருபத்தைந்து கந்தையாமாருள் சவர்க்காரக் கந்தையா என வீ. மு. க பெயர் பெறுவரானார். இறக்குமதிச் சவர்க்காரங்களோடு எதிர் நீச்சல்போட ஆரம்பித்த குடிசைத் தொழில் முதன் முதலாகச் சவர்க்காரத்தோடு நீலத்தையும் கலந்து செய்து ஒரு சாதனையை நிலை நாட்டினார். அந்த அருமையான கலவை வீதாசாரத்தை இன்றும்தான் கைத்தொழிலுலகம் வியந்து அந்த "போமுலா" வை அறிய ஆவல் கொண்டுள்ளது.

அன்று கந்தையாவின் சக்தி மீனாட்சி பிடிக்கொழுக்கட்டைபோல உருட்டிய போனைச் சவர்க்காரத்திற்கு ஊரெங்கும் நல்ல வரவேற்பு. இன்று சக்தி என்னும் இயந்திரம் உள்ளூரிலேயே தயாரிக்கப் பெற்றுச் சவர்க்காரங்களை நறுக்கித்தள்ளுகிறது. சிவசக்தி என்னும் இயந்திரம் பெயர் முத்திரை பொறிக்கிறது.

என்றும் மரம் ......... (9ஆம் பக்கத் தொடர்ச்சி)

பை, துவாய் கொடுக்கிறார் என்றால் இது ஒரு தனிப்பட்ட மனிதனின் தனியான, தணியாத தாகம் தானே. எங்கள் மண்ணை மலடாக்கி விட்டுக் காற்சட்டை அணியும் வேலை தேடுவதில் மகிமையில்லை. அன்னை பூமி அழைக்கிறாள் அங்கே செல்க தம்பிமார் என்பது மில்க்வைற் உபதேச மந்திரம்.

★ பனைவளம் பெருக்குவதைப் பணியாய்க்கொண்ட தொழிலகம் ★

## சமூகக்கல்வி

இற்றைக்குச்சில ஆண்டுகளுக்குமுன், சுற்றுடற்கல்வி, சமூகக்கல்வி என்னும் பாடங்கள் சம்பந்தமாக நூல் வரிசை எழுதிய பழுத்த அனுபவம் எமக்குண்டு. மனித சமுதாயம் இதுவரை முன்னேற்ற மடைந்துள்ள வரலாற்றைத் தொடர்புபடுத்தித் தொகுத்துக் கூறும்பாடமே சமூகக்கல்வி.


இதில் பொதுவாக சரித்திரம், பூகோளம், பொருளாதாரம், அரசியல் முதலாய பாடங்கள் ஒன்றோடொன்று தொடர்புபடுத்தப்படுவதே பாடத்தின் நோக்கம். இதில் அவை தனிப்பாடங்களல்ல.
மக்களின் வாழ்க்கை சூழல் என்னும் சுற்றுடலைப் பொறுத்தே அமைவது. சூழலை அறிந்து அதற்கு அமைவாக வாழ்தல் ஒருதலை. பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல் என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கண்ட தமிழனே, யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று உலகந்தழுவிய வாழ்வையும் கண்டவனுவன்.

நிலம் சுரக்கும் நிதியம் கணக்கில என்று கண்ட தமிழன் நிலந்தருதிரவியங்களையும், மலை தருதிரவியங்களையும் கடல்படு திரவியங்களையும் நன்கறிந்திருந்ததோடு, திரைகடலோடித் திரவியம் தேடுதலிலும் தீவிரமாயிருந்தவன்.

இனிசமூகக்கல்வி பயில்வதன் நோக்கம், பயன் பெறுபேறு என்பன பெருமளவில் நன்மைபயப்பனவாகும் மாணுக்கரிடம் ஒழுங்கு, நேர்மை, ஒற்றுமை, பரந்த மனப்பான்மை, நாட்டுப்பற்று, மொழிப்பற்று. விட்டுக் கொடுக்கும் இயல்பு என்பன அவர்களிடம் தாவிப் படர்ந்து அவர்களை மனிதர்களாக உருவாக்கிவிடும். கல்வியின் நோக்கம் பிள்ளைகளை மனிதராக்குதலேயாம் என்பதை ஆசிரியர்கள் அறிந்து கொண்டால் போதுமானது.

## யப்பானியர் பழமொழிகள்

1. பொய்க்குக் காலில்லை. இறகுகள் உண்டு.
2. பெண்ணின் மூன்றங்குல நா ஆறடி மனிதனைக் கொல்லும்
3. கூட்டத்தில் கை கொட்டுதல் வெறுப்புக்கு அத்திவாரம்
4. வலியவனை ஏழனஞ் செய்தலாகாது
5. விளக்கேற்றும் போது ஆசைகளை அகற்றுங்கள்
6, தீர்க்கதரிசிக்கு சாத்திரஞ் சொல்லாதே
7. பசித்தவனுக்கு மலையழகு என்ன செய்யும்
8. நரகலோகத்தவரும் செல்வனை வணங்குவர்
9. ஏழுதரம் விழுந்து எட்டாம் முறை நிமிர்ந்து நில்
10. தெருவில் நாய்க்கும் ஏழையின் வீட்டைத்தெரியும்
11. அவசரப்படுபவன் மீன் பிடிக்கமாட்டான்
12. நல்ல மருந்து கைப்பாகவே இருக்கும்
13. சண்டை பிடிப்பவர்களின் நாய்களும் பேதங்காணும்
14. குடும்பத்தைத் திருத்துவதிலும் நாட்டை ஆள்தல் சுலபம்
15. கள்வர் போனபின் சுவரைக் கோபித்துப்பயனில்லை
16. கடனுதவியிலும் பார்க்க ஆதரவுப் பேச்சு நல்லது.
17. ஞானமின்றிக் கற்றவன் புத்தகம் சுமந்த கழுதை
18. வயலிலே நீந்தப் பழக முடியாது
19. ஊற்றிய நீரைத் தேக்க முடியாது
20. கிணற்றுத் தவளை ஆழ் கடலை அறியாது
21. தொழிலாளர்களையும் பெண்களையும் கட்டியவிழ்த்தல் கடினம்.




## ஜேம்ஸ் அலென் சொன்னவை

பரமபதியிடம் பக்தியுள்ளவர் மற்றவரைச் சாதி மதம் பேசித் தரம்பிரிக்கமாட்டார். தம்மதத்துக்கு மற்றவரை இழுக்கமாட்டார். தம்பெருமையைப் பறைசாற்றமாட்டார். அவர் வாழ்க்கை நெறியறிந்து வாழ்வாங்கு வாழும் பெருமனிதன். அவர் அமைதியையே கடைப்பிடிக்கும் மனப்பண்பாடு அமைந்தவர். அவர் எல்லோரிடமும் இனிமையுள்ளவராய், இனிமைகாண்பவராயிருப்பார். அவர் சுய ஒழுக்கம், கட்டுப்பாடு, பெருந்தன்மை, அபிமானம் உள்ளவராய்த் தன்னை வென்றவராய்ப் பிறரையும் பார்வையால் பேச்சால் வெல்பவராயிருப்பர். அவர் அதிகம் பேசமாட்டார்.

## குடிசைத்தொழில்தான்

வேலையின்மையைப் போக்குகிறது. நாமே நமக்கு உதவி என்கின்றது. பாரம்பரியக்கலைகள் வளர்கின்றன வெளிநாடுகளை நம்பத் தேவையில்லை என்றுகிறது. உள்ளூர் மூலப்பொருள்கள் தக்கபயன் பெறுகின்றன. உழைக்கும் கரங்கள் உறுதிபெறுகின்றன.

எள், வேம்பு, இலுப்பை. தென்னை, ஆமணக்கு முதலியன எண்ணெய் ஊற்ற உதவுவன. இன்று அங்கொன்று இங்கொன்றுகச் செக்குகள் இயங்குகின்றன. பெண்களுக்கு வாழ்வளித்த கைத்தறிகள், மின்தறியாய போதும் வண்ணப் புடைவைகள் செய்தன. அவையும் தடுமாறிப் போகின்றன. பாய் கடகம் உறி பெட்டி சுளகு யாவும் தரும் பனையபிவிருத்தி போதாது. ஓடுகள் செங்கட்டிகள், சட்டிபானைகள் உற்பத்தி இன்னும் வேண்டும். பழையபடி பானையைத்தேடி உலைவைப்பதற்கு அலுமினியம் இடம் கொடுக்கப்போகிறது. பசுவளர்த்தலும் தேனீவளர்த்தலும் இன்னும் பரவலாகப் போகின்றன.

வெல்லம் காய்ச்சுதல், உரம் தயாரித்தல், குண்டூசி, கிளிப், தபால் உறை, மை, தீப்பெட்டி, தடிவிளக்குமாறு துடைப்பம் முதலியன செய்வோர் இன்னும் பலர் முன் வருதல் வேண்டும்.


★ சிக்கனச் சலவைக்குச் சிறந்தவை எங்கள் தயாரிப்புகள் ★

## குசேலசம்பத்து

பாரதநாடு உட்படப் பல்வேறு நாடுகள் இரண்டு பிள்ளைகள் போதும் என்று கட்டுப்பாடு விதிக்கின்றன. அன்று குசேலமுனிவர் இருபத்தேழு பிள்ளைகளுக்குத் தந்தையாய் இருந்தார். சுசீலை வயிற்றில் இப்பிள்ளைகள் பிறந்தார்கள்.

கொழும்பில் வாழ்ந்த லேயாட் என்னும் பறங்கிக்காரன் இருபத்தாறு பிள்ளைகளுக்குத் தந்தை. உரும்பராய்ச் சின்னையா மலேசியாவாசி இருபத்து நான்கு பிள்ளைகளுக்கு அப்பன். திரைப்பட நடிகன் சாளி சப்ளினின் மனைவி அநேக பிள்ளைகளைப் பெறவிரும்பினார்.

இன்று தென்அமெரிக்காவில் சிசிலி நாட்டில் வியன்ரினா அல்வினா ஐம்பத்தைந்து வயதுவரை 51 பிள்ளைகளைப் பெற்றுள்ளார். முதற்பிள்ளையைத் தனது பதினாகாம் வயதில் பெற்றவள். ஏழுமுறை இரட்டைப்பிள்ளைகளையும் நான்குமுறை மும்மூன்று பிள்ளைகளையும் பெற்றாராம். வீடு நிறைந்த செல்வம் இருந்தவாறு.


SERVE LOVE MEDITATE REALISE

OM SRI SIVANANDAYA NAMAH

THE DIVINE LIFE SOCIETY, KANDY.

Yoga Asana Competition.

1960

This is to certify that

Sri K Kanagarajah

Has taken part in the Yoga Asana Competition held at Satchidananda Thapovanam, Tennekumbura, Kandy, on 10 May 1960 during the Fourth Annual Celebration of the Society, and was awarded the Third Prize for effeciency in Yoga Asanas.

May Lord bless the Yogi with Health, Long life, Peace, Prosperity and Bliss.

With regards, Prem, and Om,

Hony. Secretary.

Satchidanand

President.

## யோகாசன சான்றிதழ்

தொழிலதிபர் கனகராசா இளமையில் நன்கு பழகிய மலைநாடு, கம்பளை, கண்டி எங்கும் பழகிய அவருக்கு மாவலிகங்கை நல்லபழக்கம். கண்டியையடுத்த பேராதனையில் இயற்கைவனப்பில் இலங்கைப் பல்கலைக்கழகம் கலகலப்பாக இருந்தது.

மாவலிக்கரையில் தென்னக்கும்பராவில் அமைதி நிலவிய ஆச்சிரமத்தோடு குருவும் சீடரும் வாழ்ந்தனர். பழைய பாரம்பரியத்தில் யோகாசன வகுப்புக்கள் நடைபெற்றன.

இமய சோதி சிவானந்த மகரிஷியிடம் பயின்றுவந்த எஞ்ஜினியர் சச்சிதானந்தர் ஒரு துறவி. தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் எனக்கருதித் தாம் பெற்ற யோகக் கலையை வெகு நுட்பமாக மாணாக்கர்களுக்குப் பழக்கி வந்தார்.

இளைஞர் கனகராசா அங்கே சென்று இருளன இருந்து எழுளன எழுந்து யோகம் பயின்றார். இவர் சிரத்தையோடும் திறமையோடும் பழகியவர் என்பதற்குச் சுவாமி சச்சிதானந்த அவர்கள் திவ்வியஜீவன சங்கத்தின் சார்பில் அளித்த சான்றிதழ் இது.

## ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்தன

இந்த உலகத்தின் இயல்பைச் சைவசித்தாந்தம் ஒன்றாய் அரும்பிப்பலவாய் விரிந்தது என்று கூறும். இவ்வண்ணமே மில்க்வைற் தொழிலகமும் நீலக்கட்டி செய்யத் தொடங்கி, இன்று பல விதமான வர்க்கங்களை வண்ணமாகச் செய்கிறது.

இவ்வித உற்பத்திப் பெருக்கத்துக்குப் விற்பனைக்கும் முதற்காரணமாய் உள்ளவர்கள் ஆதரவாளர்களேயாம். ஆதரவு பெருகுதல் அறப்பணிக்கு வழியெனக் கண்ட தொழிலதிபர் கனகராசா அவர்களுக்கு அவரின் கொடைக்கரமாய தருகைக்கு அபயகரம் ஆதரவாளர் அத்தனைபேரின் கைகளேயாம். இடது கையறியாமல் கொடுக்கின்ற வலது கரத்திற்கு அபயமளிக்கும் கரங்களோ ஆயிரம் ஆயிரம். இது நல்ல உறவு. கொடுக்கும் கைகுவிய கொள்ளும் கை மலர்தல் ஓர் அற்புதம். இது திருவருள் பாலிப்பிலும் கண்ட உண்மை. எங்கள் இதயமலர் குவிந்து வணங்க, இறைவன் திருவடி மலர் விரிந்து எம்மை வரவேற்கிறது.

## தோன்றாத்துணை?

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் மூன்றாம் ஆண்டில் தேவாரம் பாடினார். மெய்கண்டார் மூன்றாம் ஆண்டில் சிவஞானபோதம் சொன்னார். எப்படி? எப்படி?

இன்று இரண்டுவயதுள்ள அன்ரனி மாக்கோன் என்னும் குழந்தை சேக்ஸ்பியர் பொன்மொழிகளைக் கையாளுகிறதாம். எந்த இனத்துக்காரரையும் பெயரிட்டுக் கூறுகிறதாம். நிரம்பிய மொழித்திறனோடு, நூற்றுக் கணக்கான தாவரங்களின் லத்தின் பெயர்களைச் சொல்லுகிறதாம். மற்றவர் பேசும் போது விடும் பிழைகளை திருத்துகிறதாம். அதற்கு ஆதாம் என்னும் தோன்றாத் துணை ஒன்று உண்டாம் எப்படி? எப்படி?

## இரத்த அமுக்கத்துக்கு

வாழைப்பழம் மிகவும் நல்லபழம். தினமும் இரண்டு பழங்களாயினும் உண்டுவருதல் நல்லது. வாழைப்பழத்தில் சோடியம், கல்சியம், பொட்டாசியம், மக்னீசியம் எல்லாம் உண்டு என்கிறார்கள். பழைய விரதகாரர் பாலும் பழமும் உண்டார்கள் என்பது பலருக்கும் தெரியாது. தாய்ப்பால், பசுப்பால் ஆகிய திரவ உணவுகளின் பின் முதல் திடப்பொருள் உணவு வாழைப் பழமேதான். வாழ்வளிக்கும் வாழையை நன்றாக வளம் படுத்துவோமாக.

★ வெண்மைக்கும் தூய்மைக்கும் வகைசெய்வோம் ★

## இன்றைய வேகம்

இன்றைய வண்டிவாகன வேகம் யப்பான், பிரான்ஸ் தேசவளர்ச்சியில் இலங்கைக்கு வந்தால் இந்த நூற்றாண்டிலேயே இங்கிருந்து கொழும்புக்கு ஒருமணி நேரத்தில் போகலாம். இது விமானப் போக்கல்ல. இது தண்டவாளத்தில் தடம் புரளாமல் ஓடும் வண்டிவேகம். யப்பானியர் இதை Bullet Trains என்கிறார்கள். பிரான்சியர் தங்கள் வண்டியை T. V. G. என்கிறார்கள். அஃதாவது Trains in grand Vitense. இது மணிக்கு 255 கிலோமைல் போகிறது.

## தமிழில் வழங்கும் வடமொழிப் பதங்கள்

| | | |
|---|---|---|
| 1. விகடம் | — | பகடி |
| 2. விகாரம் | — | வேறுபாடு |
| 3. விக்கிரகம் | — | உருவம் |
| 4. விக்நம் | — | இடையூறு |
| 5. விக்ஞாபனம் | — | விண்ணப்பம் |
| 6. விஜயம் | — | வெற்றி |
| 7. விசாரணை | | ஆராய்ச்சி |
| 8. விசாரம் | — | கவலை |
| 9. விசாலம் | — | விரிவு |
| 10. விசித்திரம் | — | புதுமை |
| 11. விசுவம் | — | உலகம் |
| 12. விசுவாசம் | — | நம்பிக்கை |
| 13. விசேஷம் | — | சிறப்பு |
| 14. விசேடணம் | — | அடைமொழி |
| 15. வித்தை | — | அறிவு |
| 16. விஞ்ஞாபனம் | — | அறிவிப்பு |
| 17. விஞ்ஞை | — | கல்வி |
| 18. விடங்கம் | — | அழகு |
| 19. விடம் | — | நஞ்சு |
| 20. விஷயம் | — | பொருள் |

## இமயஞ்சார்ந்த மூலிகைகள்

நாமக்கல் இராமலிங்கம் ஓவியக்காரரும் காந்தியக் கவிஞரும் பெரிய ரசிகருமாவர். அவர் சித்த வைத்தியத்தின் அருமையைப் பாடியவர். இமயஞ்சார்ந்த திபெத் நாட்டில் 84 000 நோய்கள் நிரைப்படுத்தப் பெற்றுள்ளனவாம். இவை 1004 தலைப்புக்களில் தரப்படுத்தப்பட்டு 2000 வகையான குடிநீர்களினால் நீக்கப்படலாம் என ஆய்ந்துள்ளார்களாம். இன்று உலகில் தீராத நோய்களைத் தீர்க்கும் மருந்து திபெத்தில் உண்டென்று திடமாக கூறுகிறார்கள்.

## ஐக்கிய நாடுகள்


தென்கிழக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த புறூணை டார்சலாம் நாடு ஐக்கியநாடுகளில் சேர்ந்ததும், நாடுகளின் தொகை 159 ஆயிற்று. நாங்கள் 1955 ஆம் ஆண்டில் சேரப்பட்டபாடு பகீரதப்பிரயத்தனமாகும்.

## தொகையகராதி
## 5 ஐவரும் ஐந்தும் 5

1. ஐங்கணை — தாமரை, மாம்பூ, அசோகம், முல்லை நீலோற்பலம்.
2. ஐங்கதி — மல்லகதி, மயூரகதி, வானரகதி, இடபகதி, மனோகதி.
3. ஐங்கலை — வித்தியாகலை, நிவிர்த்திகலை, பிரதிட்டாகலை, சாந்திகலை, சாந்தியதீத்கலை.
4. ஐங்காயம் — உள்ளி, கடுகு, சுக்கு, பெருங்காயம், மிளகு.
5. ஐம்பெருங்காப்பியம் — சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி.
6. ஐங்குரவர் — அரசர், குரு, தாய், தந்தை, தமையன்.
7. ஐங்குழுவினர் — சாரணர், சேனாதிபதியர், தூதர் புரோகிதர், மந்திரிகள்.
8. ஐஞ்சத்தி – ஆதிசத்தி, பராசத்தி, இச்சாசத்தி கிரியாசத்தி, ஞானசத்தி.
9. ஐந்தங்கம் — வாரம், திதி, கரணம், யோகம், நட்சத்திரம்.
10. ஐந்தரு — அரிசந்தனம், கற்பகதரு, சந்தானம் பாரிசாதம், மந்தாரம்.
11. ஐந்தவத்தை — சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி துரியம், துரியாதீதம்.
12. ஐந்திணைத்தெய்வங்கள் — முருகன், துர்க்கை, திருமால், இந்திரன், வருணன்.

## பிற்காலத்துப் புராணங்கள் சில

1, கந்தபுராணம்
கச்சியப்பசிவாசாரியார்
2. திருவிளையாடற் புராணம்
பரஞ்சோதி முனிவர்
3. திருவாலயாய் திருவிளையாடற் புராணம்
பெரும்பற்றப்புலியூர் நம்பி
4 விநாயகபுரரணம்
கச்சியப்பமுனிவர்
5. தணிகைப் புராணம்
கச்சியப்பமுனிவர்
6. கோயிற் புராணம்
உமாபதி சிவாசாரியர்
7. இலிங்கபுராணம்
குலசேகரபாண்டியன்
8. சிவதருமோத்தரம்
மறைஞான சம்பத்தர்
9. வாயுசங்கிதை
வரதுங்கராமபாண்டியன்
10. பிரமோத்தர காண்டம்
வரதுங்கராமபாண்டியன்
11. கூர்மபுராணம்
அதிவீரராமபாண்டியன்
12. காசிகாண்டம்
அதிவீரராமபாண்டியன்




முற்போக்கு என்பதற்குத் திருப்பாதிரிப்புலியூர் அசலாம்பிகை அம்மையார் முன்னோர்தம் போக்கு, முன்னோர் நடை எனப் பொருள் கொள்வர். அவர் அன்றொரு நாள் சாவித்திரி பற்றிப் பேசியவை இன்றும் நினைவிற் கொள்ளக் கூடியதாயுள்ளது.

அசுவபதி மகாராசாவின் அருந்தவப் புதல்வியாகிய சாவித்திரி சுயம்வரம் என்னும் மணமுறையில் தனக்கேற்ற கணவனைத் தெரிந்த போது, நாடுநகரிழந்து காடுறைந்த மாளவதேசத்து மன்னன் மகன் சத்தியவான் என்பானையே உத்தமன் எனவரித்துக் கொண்டாள்.

அவனைப்பற்றிக் குறிப்பிட்ட நாரதமுனிவர் அவனுடைய ஆயுட்காலம் இன்னும் ஓராண்டுக்குள் முடிவுறும் எனக் கூறிய போதும், சாவித்திரி மனந்தளராது, சத்தியவானையே மணந்து, இயமனிடம் ஆயுள் நீடிப்பும் கேட்டதோடு, பல்வேறு வரங்களையும் கேட்டுப் பெற்றுப் பிறந்த வீட்டுக்கும் புகுந்த வீட்டுக்கும் பெருமையும் நிறைவும் பெற்றுக் கொடுத்தாள்.

மனவுறுதி, மனச்சான்று, சத்யபுத்தி, அறத்தொடு நிற்றல், கற்பு என்பன பெண்மைக் குணங்களில் பெருமதிப்புவாய்ந்தவை என்பதை நங்கையர் அறிந்து நாட்டை வாழவைப்பார்களாக.

## "கொம்பை வெட்டி கால்கொடும்"

தமிழ் நாட்டில் திருக்கழுக்குன்றம் என்னும் திருத்தலத்தினருகாமையில் வாழ்ந்த வடுகநாதர் என்னும் பெரியாரின் மைந்தனாய வீரராகவன் பிறவிக்குருடர். ஆனால் அவர் காஞ்சியிலிருந்த கச்சியப்பர் என்னும் பெரும் புலவரிடம் பாடம் கேட்டுப் பெரும் புலமை பெற்றவர்.

அவர் பலவகைப் பிரபந்தங்கள் பாடியவர் யாழ்ப்பாணத்திற்கு வந்து போனதாகவும் வரலாறு கூறுகிறது. அவர் பாடிய பன்னிரண்டு பெரு நூல்களில் சந்திரவாணன் கோவை என்பதும் ஒன்று. அந்த நூலை அவர் காஞ்சிபுரத்தில் பெரும் புலவர்கள் கூடியிருந்த அவையில் அரங்கேற்றிய போது, சீடன் ஒருவன் பாடல்களைப் படித்தான். ஒரு பாடலில் "முப்பழச் சேற்றின் அமுத வயல்" எனவந்தது.

இதைக்கேட்டுக் கொண்டிருந்த அம்மைச்சி என்னும் பெண், "வீரராகவருக்குக் கண்தான் கெட்டன, மதியும் கெட்டதோ?" என்றாள், உடனே வீரராகவர் ஏடுபடித்தவனிடம் "தம்பி, கொம்பை வெட்டிக் கால் கொடு" என்றார். உடனே அவன் "முப்பழச்சாற்றின் அமுத வயல்" என்று படித்தான். அவையோர் புலவரின் பெருநயப்புரைத்தலை மெச்சினர்.



## காமாட்சி அம்மன்

தாயே வணக்கம்! உன்னிடம் ஆயிரக்கணக்கானோர் அடைக்கலம் புகுந்தவேளையில் நீ அவர்களை அடைகாக்கும் தாய்க்கோழிபோல அணைத்து அமுதளித்து ஆதரவளித்தாய். எங்கள் தொழிலதிபரும் ஆயிரவருள் ஒருவராய்த் தம் பாரியாரோடு உன் பாதார விந்தம் பணிந்தார்.

உலக முதற்பொருளே! உம்பரும் உணரமுடியாத ஒரு பொருளே! வேதாகமங்களின் உச்சியில் பூத்த மலரே! மலரில் காய்த்துக் கனிந்த கனிப்பொருளே. தேனே! தெவிட்டாத திவ்வியம் பழுத்த உணர்வே சிந்தனைக்கும் எட்டாச் செழுஞ்சுடரே! நீயோ நித்திய, நிர்க்குரை, நிட்கள, நிராமய, துரிய, துரியாதீதபர, பரத்துவ பரப்பிரம்மம். நீயே சர்வசாட்சியினிடத்து அபின்னமாய்த் தோன்றி, உலகத்தை ஆட்டுவிக்கும் சத்து, சித்து, ஆனந்த சுயம்சோதி சொரூபிணி. நீயே ஆதிசக்தி, மகாசக்தி, சிற்சக்தி என்றெல்லாம் விரிந்தவள். நீயே சர்வ ஆன்மாக்களுக்கும் அருள்பாலித்து அடிமைப்படுத்துபவள். பெருஞ்சுடராயும் ஓங்காரப்பெரு வெளியாயும் உள்ள உன்னால் முடியாததும் உண்டோ. தேவி கடைக்கண் திறந்து எங்களைக் காப்பாற்றுவாயாக.

தாயே வணக்கம்.

## அறிந்து கொள்ளுங்கள்


ரஷ்ய நாட்டில் பல்வேறு மூலிகைகளைத் தேடிப்படம் பிடித்துச் சுற்றுடலை நன்றாகக் கற்பிக்கிறார்கள். பல மூலிகைகள் முத்திரைகளில் உலாவருகின்றன.

பழைய காலத்தில் கிளிகள் நன்றாகப் பாடங்கேட்டு மாணாக்கர்களுக்குச் சொல்லிக் கொடுத்தன. கலிங்கத்துப்பரணியில் வரும் கிளிகள் தம்பதிகளில் காதல் வசனங்களைப் பாடமாக்கிப் பகலில் அவர்களிடமே ஒப்படைத்தனவாம். கம்பளையில் தொழிலதிபராயுள்ள முஸ்லிம் பெருமகனார் வீட்டுமைனா, காலையில் பிள்ளைகள் நித்திரைவிட்டெழச் செய்து பாடசாலையை நினைவூட்டியதை அறிந்தோம்.

மொஹஞ்சதரோ, ஹரப்பா இரண்டும் பாக்கிஸ்தான் நாட்டுக்கே சேர்ந்துவிட்டன. அன்றிப்பழைய தட்சசீலமும் அங்கேதான் அழிந்துகிடக்கிறது.

★ நுரைவளம் உள்ளவை எங்கள் தயாரிப்புகள் ★

# மாட்டு வண்டி



வாழ்க்கையில் நாம் பலவிடயங்கள் சம்பந்தமாகத் திரும்பிப் பார்க்கவேண்டும். மேற்கு நாடுகளில் எவரும் அறியுமுன்னரே தமிழ் நாட்டில் உருழிகொண்டுருண்ட வண்டிஓடியது. மாட்டுவண்டி அற்புதமான கண்டு பிடிப்பு அதன் சில்லைப் பார்த்தான் பழந்தமிழ்ப் புலவன். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே அவன் பாடினான். வட்டமான சில்லின் கம்புகள் மையத்தில் பொருந்தியமைந்தவாறும் அது திருந்துநிலையில் பொருந்தியமையையும், மையத்தில் முழவுக்கு வரைந்த விட்டம்போல அமைவு இருந்ததையும் பார்த்தான். கொழுஞ்சூட்டருந்திய திருந்து நிலையாரத்து முழவினன்ன உருழி என்றான். உருண்டையான சில்லு உருண்டோடும் உருழியாகிப் பாரவண்டியை எடுத்துப் போனதைப் பாடினான். அந்தவண்டி மாட்டுவண்டி. வயலில் உழுதுவரும் எருது, உருழியையும் இழுத்துச் சென்றது.

அந்தக் காலத்தில் புகழ்பெற்ற சின்னத்தம்பியார் விட்டுச் சுருட்டுப் பெட்டிகளைக் கொழும்புவரை கொண்டுசென்ற மாட்டுவண்டியைப் பற்றி யாரறிவார். கந்தமடத்து அம்மன் வீதிக்கு அந்நாளில் கம்பந்தறை என்று பெயர். இங்கே ஆனைப்பந்தியில் கட்டப்பெற்ற யானைகளுக்குக் கம்புவிளைந்தது. அதோடு வைமன் வீதியில் கரும்பு விளைந்தது. அது கருப்பங்கொல்லை.

கம்பந்தறையில் வண்டி வைத்திருந்த முருகர் உல்லாசப்போக்குள்ளவர். அவர் சுருட்டுப்பெட்டியோடு ஒருநாள் ஓர் இளைஞனையும் ஏற்றிப்போனார். அந்த இளைஞன் நல்லதம்பியார் மைந்தன் நடராசா. அந்த நடராசா கொழும்பில் திறைசேரியில் உத்தியோகமாகி உயர்வுபெற்றுப் பெரும் புகழ்பெற்றவர்.

புகழ்பூத்த மாட்டுவண்டி ஒன்று மில்க்வைற் முருகேசர் கந்தையாபிள்ளையிடமும் இருந்தது. அதை அவருடைய மைந்தன் கனகராசா பென்ஸ் கார் என்று சொல்லி அதிலே சவர்க்காரம் விநியோகம் செய்தவர்.

அண்மையில் நிலவிய சூழ்நிலையில் அவசரவிநியோகத்துக்குக் கைகொடுத்ததும் ஒரு மாட்டுவண்டியேதான். ஆதரவாளர்களுக்கும் அகதி முகாம்களுக்கும் விநியோகஞ் செய்வதற்கு உதவிய மாட்டுவண்டி வாழ்க. திரும்பிப் பார்ப்போமாக.

## அறுபதுக்கு அறுபது

மில்க்வைற் தொழிலகத்துக்கும் அறுபது அதுமணிவிழா. தொழிலதிபருக்கும் அறுபது. அது சஷ்டியப்த பூர்த்தி. இரண்டும் ஒன்றாயரும்பி அமைதியாக அம்பிகை கோயிலில் நடைபெற்றன. இவ்வைபவத்தைக் குறித்து அறுபதுக்கு அறுபது என்றொரு நூலும் வெளியிடப்பெற்றது.

இன்னும் எங்கள் தமிழன்னையின் பெருமை பேசும் அறுபது வாக்கியங்கள் இச்செய்தியிலேயே வருகின்றன. இன்னும் மில்க்வைற் கண்ட அறுபதாண்டுகளின் பெயர்களும் வரிசையாய் வந்துள்ளன. சைவச் சூழலில் அறுபதாண்டுகள் ஒரு சுற்று. இவை மீண்டும் சுற்றிச் சுழன்று வரும்.



## அந்த நவம்பர் இருபத்தாறு

அது 1930 ஆம் ஆண்டின் நவெம்பர். அதில் இருபத்தாறும் நாள் இலங்கைக்குப் பொதுவாகவும் யாழ்ப்பாணத்திற்குச் சிறப்பாகவும் பெருநட்டம் உண்டான நாள். அவர் எண்பதாண்டுகள் பிறர்க்குரியாளராய் வாழ்ந்து ஆயிரம் பிறைகள் கண்டதோடு ஆயிரக்கணக்கான நங்கையர்க்கும் நம்பியர்க்கும் கல்விக்கண் திறந்த ஞானபானு. காடெல்லாம் செந் நெற்கழனியாக்கிய கமக்காரன். அவர் 1879 ஆம் ஆண்டு முதல் இலங்கைச் சட்டசபையில் நியமன அங்கத்தவராயும், உத்தியோக அங்கத்தவராயும், தெரியப்பெற்ற அங்கத்தவராயும் அங்கம் வகித்து அரசியல் வளர்ச்சியின் பொருட்டு அயராது உழைத்தவர். அவர் காலத்தில் சைவம் வளர்த்த சான்றோராயும், தமிழ்வளர்த்த செம்மலராயும் தொண்டு புரிந்த பெருந் தொண்டர். பரமேஸ்வரப்பெருமானைப் பத்திமையோடு பரவிய பக்தர். கொழும்பில் கோடி பணம் செலவிட்டாலும் கட்டமுடியாத கருங்கற் சிவாலயத்தைப் பொர்ன்னம்பலவாணேசுவரப் பெருமானுக்கு கட்டியவர். இப்பால் திருநெல்வேலியில் 1926 இல் அத்திவாரமிட்டு 1928 இல் பரமேஸ்வராலய கும்பாபிடேகஞ் செய்தவர். அவர் மறைந்த நவெம்பர் இருபத்தாறும் நாள் மெல்லிசைப்பாடல் ஒன்றில் அன்றொலித்தது.

இட்டதொரு நவெம்பர் மாதம் இருபத்தாறும் தேதியிலே உயிர் துறந்தாராம், பத்தொன்பதாம் நூற்றுக்குமேல் முப்பதாம் வருடத்திலே என்றெல்லாம் தொடர்ந்து ஒலித்தது அம்மெல்லிசை. இலங்கையில் எந்த அரசியல் தலைவரும் காணாத பெரிய இறுதியாத்திரை இராமநாதன் அவர்களின் இறுதியாத்திரை.

## LEARN YOUR ENGLISH

Know for yourselves some prepositions they are of, by, in, into, to, with etc. Now we shall know some connected with (of)

1 Angle of vision
2 Apostle of culture
3 Attitude of mind
4 Bars of sunlight
5 Beam of moonlight
6 Beast of prey
7 Easy of access
8 Emotion of joy
9 Energy of youth
10 Feats of strength


### நாம் செய்யவேண்டியவை

நல்லதையே நினைப்போம்.
நல்லதையே செய்வோம்.
சுற்றுடலைத் தூய்மை செய்வோம்.
குளங்களைத் தோண்டி ஆழமாக்குவோம்.
போதியளவு மழைநீரைத் தேக்குவோம்.
இயன்றளவு பலவகை மரங்களை நடுவோம்
பனையபிவிருத்தியில் ஊக்கம் எடுப்போம்
பனம்பண்டங்களை உபயோகிப்போம்
உள்ளூர் உற்பத்திகளை ஆதரிப்போம்
வயல்களில் மாற்றுபயிர்களை உண்டாக்குவோம்
நல்லதமிழ் பேசவும் எழுதவும் பயில்வோம்
பெரியவர்களை வணங்கி நல்லாசி பெறுவோம்
எல்லோரும் தினமும் யோகாசனம் செய்வோம்
திருக்குறளையும் நீதி நூல்களையும் படிப்போம்.
கடமையை எல்லோரும் சரிவரச் செய்வோம்
எல்லோரும் வீட்டுத்தோட்டம் செய்வோம்.

நாளும் நற்பணி செய்ய
உங்கள் ஆதரவை நாடும்

**மில்க்வைற்**

60 ஆண்டுகள் 60 ஆண்டுகள்

உங்கள் சேவையில்.


யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் "சிவநெறிப் புரவலர்" க. கனகராசா ஜே. பி. அவர்கள்
கௌரவ ஆசிரியர் திரு. க. சி. குலரத்தினம். 1-11-87.